# முஸ்லிம் ஆட்சியாளர்களின் சிறப்புகள்

இஸ்லாமியக் கலாச்சாரம் மாபெரும் ஆட்சியாளர்களை அளித்துள்ளது. அனைவரையும்விட மகத்தான ஆட்சியாளரும் தலைவரும் இறைத்தூதர் முஹம்மத் முஸ்தஃபா ﷺ அவர்களாவார்கள். முஸ்லிம்களாகிய நமக்கு இவர்கள்தான் ﷺ முன்மாதிரியானவர்கள். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

لَّقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ ٱللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُواْ ٱللَّهَ وَٱلْيَوْمَ ٱلْأَخِرَ وَذَكَرَ ٱللَّهَ كَثِيرًا ﴿٢١﴾

*பொருள்: உண்மை யாதெனில், உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருந்தது, உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகின்றவராகவும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருபவராகவும் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் (அல் அஹ்ஜ்ஸாப்:21)*

இஸ்லாம் தொடர்ச்சியாகவே முஸ்லிம் ஆட்சியாளர்களின் வழிவந்தவர்களைக் கண்டுள்ளது, இவர்கள் அனைவருமே இறைத்தூதர் ﷺ அவர்களுடைய போதனைகள் மற்றும் கட்டளைகளையும் அவர்களுடைய ﷺ சுன்னத்தான முறைகளின் அடிப்படையிலான ஒரு வழியினையே பின்பற்றி வந்துள்ளனர். உலகத்திலேயே இதனைப்போன்ற ஒரு வாழ்க்கை நெறி காணக்கிடைப்பதேயில்லை. இது எதன் காரணமாக என்றால், இவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய கீழ்க்காணும் நபிமொழியின் அடிப்படையில் செயல்பட்டு வந்தனர்:

**كُلُّكُمْ رَاعٍ، وَكُلُّكُم مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ، الإِمَامُ رَاعٍ وَمَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ، وَالرَّجُلُ رَاعٍ فِي أَهْلِهِ وَهُوَ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ، وَالمَرْأَةُ رَاعِيَةٌ فِي بَيْتِ زَوْجِهَا وَمَسْئُولَةٌ عَنْ رَعِيَّتِهَا، وَالخَادِمُ رَاعٍ فِي مَالِ سَيِّدِهِ وَمَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ» قَالَ: – وَحَسِبْتُ أَنْ قَدْ قَالَ – «وَالرَّجُلُ رَاعٍ فِي مَالِ أَبِيهِ وَمَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ، وَكُلُّكُمْ رَاعٍ وَمَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ**

*பொருள்: உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்களாக இருக்கின்றீர்கள், உங்களில் ஒவ்வொருவரும் அவர்கள் பொறுப்பில் இருந்தவர்களைப் பற்றிக் கேட்கப்படுவீர்கள். ஆட்சியாளர் ஒரு பொறுப்பாளர், அவருடைய அதிகாரத்திற்குக் கீழ் இருந்த குடிமக்களைப்பற்றி அவரிடம் கேட்கப்படும், ஒரு மனிதன் தன்னுடைய மனைவியின் பொறுப்பாளன், அவனிடம் அவனுடைய பொறுப்பின் கீழிருந்தவர்களைப்பற்றிக் கேட்கப்படும்.*

www.uzairfalahi.com

*ஒரு பணியாளர் தன்னுடைய எஜமானருடைய பொருளைப் பாதுகாப்பவனாக இருக்கின்றான், அவனுடைய அதிகாரத்தின் கீழ் இருந்ததைப் பற்றி அவனிடம் கேட்டப்படும். அறிவிப்பாளர் இதனையும் கூறியதாக அறிவிக்கின்றார், ஒரு மனிதன் தன்னுடைய தந்தையின் பொருளைப் பாது காப்பவனாக இருக்கின்றான், அவன், தன் பொறுப்பிலிருந்தவற்றைப் பற்றிக் கேட்கப்படுவான். அனைவருமே பொறுப்பாளர்கள், அவரவர் பொறுப்பிலுள்ளதைப்பற்றிக் கேட்கப்படுவார்கள்* (புக்ஹாரி, முஸ்லிம்).

முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு ஒரு ஆட்சியாளரின் பொறுப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது மற்றும் மகத்தான அந்தஸ்தினையும் உடையது என்பது மிகத்தெளிவாகவே தெரிந்திருந்தது, ஏனெனில், இதன் தொடர்பு மார்க்கம் மற்றும் இவ்வுலக வாழ்க்கையின் பல்வேறு விஷயங்களுடன் தொடர்புடையதாக உள்ளது என்றும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆகவே தான், எவரிடம் இந்தத் தகுதிகள் மற்றும் சிறப்புகள் பெறப்படுகின்றனவோ மற்றும் இவற்றின் மூலம் அவர் இப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தகுதியுள்ளவராக ஆக்கப்படுவாரரோ அவர்தான் இந்தப் பெறுப்பினை ஏற்கும் தகுதியினைப் பெற்றவராவார். இந்த சிறப்பம்சங்களில் சில கீழ்வருமாறு:

1 **அதிகாரம் அளிக்கப்படுவது ஒரு பொறுப்பாகும், அந்தஸ்துக்கான ஒரு விஷயமல்ல என்பதை அவர் நன்குணர்ந்திருக்கவேண்டும்**

மக்கள்தான் இவரைத் தேர்ந்தெடுத்துள்ளனர் மற்றும் அவருடைய தகுதியின் அடிப்படையில் அவரிடம் அதிகாரங்களையும் ஒப்படைத்துள்ளனர். அத்துடன், அவர் கூறுவதற்கு செவிசாய்த்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் வாக்களித்துள்ளனர். அவரை மார்க்க விஷயங்களைப் பாதுகாக்கவும் வாழ்க்கையின் பல்வேறு ஈடுபாடுகளை சீரமைக்கவும் தங்களுக்கு உதவுபவராகவும் ஆக்கி நியமித்துள்ளனர். மக்களுக்கு இவருடைய செயல்பாடுகளைக் கண்காணிக்கும் மற்றும் சரிபார்க்கவும், அவர் தம் போக்கினை மாற்றிக்கொண்டு தவறான முறையினை மேற்கொள்வாரேயானால் அவருடைய பதவியையும் அதிகாரத்தையும் பறிக்கவும் அவர்களுக்கு உரிமையுண்டு. ஒரு முஸ்லிம் ஆட்சியாளர் அவருடைய ஆட்சியதிகாரம் ஒரு அமானிதம் என்பதையும், அதனை சீரான முறையில் நிறைவேற்றாவிட்டால் மறுமை நாளில் இழிவு மற்றும் கைசேதத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பதையும் நன்கறிந்திருக்கவேண்டும்.

இதனைப்பற்றி நபிமொழியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

www.uzairfalahi.com

عَنْ أَبِي ذَرٍّ، قَالَ: قُلْتُ: يَا رَسُولَ اللهِ، أَلَا تَسْتَعْمِلُنِي؟ قَالَ: فَضَرَبَ بِيَدِهِ عَلَى مَنْكِبِي، ثُمَّ قَالَ: «يَا أَبَا ذَرٍّ، إِنَّكَ ضَعِيفٌ، وَإِنَّهَا أَمَانَةُ، وَإِنَّهَا يَوْمَ الْقِيَامَةِ خِزْيٌ وَنَدَامَةٌ، إِلَّا مَنْ أَخَذَهَا بِحَقِّهَا، وَأَدَّى الَّذِي عَلَيْهِ فِيهَا

*பொருள்: ஹஜ்ரத் அபூ த்ஜர் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கேட்டேன், இறைத்தூதரே ﷺ நீங்கள் எனக்கு சேவை செய்யும் வாய்ப்பினை அளிப்பதில்லையே. அவர்கள் ﷺ தன்னுடைய புனிதமான கையை என் தோள்மீது அடித்துக் கூறினார்கள், அபூ த்ஜர் அவர்களே(ர), நீங்கள் வலிமை குறைந்தவர்கள், இது ஒரு அமானிதமாகும் (அதாவது அடியார்களுடைய உரிமைகள் மற்றும் அல்லாஹ்வின் புறமான உரிமைகள் அனைத்துமே ஆட்சியாளர் நிறைவேற்ற வேண்டியிருக்கும்) மற்றும் எவர் இந்த அதிகாரத்தின் அடிப்படையிலான தேவைகளைப் பூர்த்தி செய்வாரோ மற்றும் தன்னுடைய பொறுப்பை முழுமையாக நிறைவேற்றுவாரோ அவர்களைத்தவிர மற்றவர்களுக்கு மறுமை நாளன்று இழிவையும் கைசேதத்தையும்தவிர வேறு ஒன்றும் கிடைக்காது. (முஸ்லிம்).*

**2 அவர் புத்திக்கூர்மை, விவேகம், மார்க்கச் சட்டங்கள் மற்றும் அதன் அடிப்படைகளை அறிந்தவராக இருக்கவேண்டும்**

www.uzaifalahi.com

அவர் ஹலாலான, ஹராமான (தடுக்கப்பட்ட)வைகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தைப்பற்றி அறிந்தவராகவும், சமூகத்தினருடைய நலன்களைப் பேணுதலுடன் பாதுகாப்பவராகவும் இருக்கவேண்டும். அத்துடன், அவர் உலக ரீதியான செயல்பாடுகளைப்பற்றியும் நன்கு அறிந்தவராக இருக்கவேண்டும. உதாரணமாக, போர்கள், வியாபார கொடுக்கல் வாங்கல்கள், வாக்குறுதிகள் மற்றும் ஒப்பந்தங்கள் செய்து கொள்வது ஆகியன.

**3 அவர் நற்பண்புகளையுடையவராக இருக்கவேண்டும்**

உதாரணமாக, அமானிதம், ஒழுக்கம் மற்றும் கொடைத் தன்மை. அத்துடன், அவர் சிறிய பெரிய பாவங்களைவிட்டு விலகியவராக இருக்க வேண்டும்.

**4 திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் தெளிவான வெளிப்படையான ஆதாரங்கள் இல்லாத விஷயங்களில் கலந்தாலோசனை முறையினை மேற்கொள்ள வேண்டும்**

அவர் அறிஞர்கள் மற்றும் அனுபவமுள்ளவர்களோடு ஆலோசனை கலக்க வேண்டும், அவர்களுடைய அறிவாற்றல், அனுபவம் மற்றும் சீரான அணுகுமுறையினைப் பயன்படுத்தியும் கொள்ளவேண்டும்.

**5 ஆட்சியாளருடைய உடல் அங்கங்கள் மற்றும் உணர்வுகள் சீரானவையாக இருக்கவேண்டும் மற்றும் ஒரு ஆட்சியாளர் தன்னுடைய பொறுப்புக்களைநிறை வேற்றுவதில் தடையாக இருக்கும் வகையிலான குறைபாடுகளுக்கு அப்பாற் பட்டவராக இருக்கவேண்டும்**

அவர் மனநிலை குன்றிய, காது கேளாமை, பேச்சின்மையால் (ஊமை யாக) பாதிக்கப்பட்டவராகவோ அல்லது கை கால் துண்டிக்கப்பட்ட வராகவோ இருக்கக்கூடாது, ஏனெனில், இவ்விதமான காரணங் களினால் அவர் தன்னுடைய பொறுப்புக்களை சீரான முறையில் நிறைவேற்றும் ஆற்றலற்றவராகவே இருப்பார்.

இவ்வகையில், இஸ்லாம் அரசியல் மற்றும் ஆட்சியதிகாரத்திற்கு மிகவும் உயர்ந்த அந்தஸ்தினை அளித்துள்ளது என்பதை நம்மால் அறியமுடிகிறது. ஏனெனில், வாழ்வியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இவை மிகவும் முக்கியமானவையாகவும் மிக்கப் பயனுள்ளவை யாகவும் உள் ளன.

* * *

www.uzairfalahi.com